செ.வெ.எண்:06 நாள்:09.12.2019

# பத்திரிக்கை செய்தி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற உள்ள ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கு முதல் கட்டமாக நாகப்பட்டினம், திருமருகல், கீழ்வேளுர், சீர்காழி, செம்பனார்கோயில் மற்றும் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியங்களில் 242 ஊராட்சி தலைவர்கள், 1884 ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 116 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் மற்றும் 11 மாவட்ட ஊராட்சி வார்டுகளுக்கு 27.12.2019-அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இரண்டாம் கட்டமாக தலைஞாயிறு, கீழையூர், வேதாரண்யம், மயிலாடுதுறை மற்றும் குத்தாலம் ஊராட்சி ஒன்றியங்களில் 192 ஊராட்சி தலைவர்கள், 1542 ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 98 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் மற்றும் 10 மாவட்ட ஊராட்சி வார்டுகளுக்கு 30.12.2019 அன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. ஆக கூடுதலாக 434 ஊராட்சி தலைவர்கள், 3426 ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 214 ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், 21 மாவட்ட ஊராட்சி வார்டுகள் ஆக மொத்தம் 4095 உள்ளாட்சி பதவிகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். 02.01.2020 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது. 06.01.2020 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் பதவி பிரமாணம் செய்யப்படுவார்கள் 11.01.2020 அன்று மாவட்ட ஊராட்சி தலைவர், மாவட்ட ஊராட்சித்துணைத்தலைவர், ஒன்றியக்குழுத்தலைவர், ஒன்றியக்குழு துணைத்தலைவர் மற்றும் ஊராட்சிமன்ற துணைத்தலைவர் ஆகியோர்களுக்கு மறைமுக தேர்தல் நடைபெறும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன் பி நாயர்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்